1984 பிப்ரவரி 23]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : சென்னையிலிருந்து 10 கி.மீ. தூரத்தில் உள்ள கோயம்பேட்டில் புதிதாக 230 ஏக்கர் நிலத்தில் அமையவிருக்கும் மொத்த வியாபாரஸ்தலத்திற்கு கொத்தவால் சாவடி மார்க்கெட்டை மாற்றும் செயற் குறிப்பு உள்ளது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலத்தை கையகப் படுத்தப்பட்டு மேம்படுத்தும் பணிகள் மேற் கொள்ளப்படவிருக் கின்றன. மண் ஆய்வு, நிலத்தடி நீர் ஆய்வு ஆகியவை முடிவடைந்துள்ளன. இத்திட்டம் ரூ. 14.32 கோடி செலவில் ஐந்தாண்டுகளில் முடிவுறலாம் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

ஊத்துக்குளி பேரூராட்சியிலுள்ள அரிசி ஆலைகள்.

147—*வினா 19661 திரு. கு. ரமணி : மாண்புமிகு தொழி லாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், ஊத்துக்குளி பேரூராட்சியில் உள்ள பல அரிசி ஆலைகள் தொழிற்சாலைச் சட்ட விதிகளை நடைமுறையாக்காமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை ஆலைகள் அப்படி நடக் கின்றன ? அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) அங்கு பதிவு செய்யப்பட்டுள்ள ஆலைகள் எவ்வளவு ? பதிவு செய்யப்படாதவை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இது பற்றி குறிப்பாக அரசுக்கு புகார்கள் ஏதும் வரவில்லை. இருப்பினும் தொழிலாளர் துறை அலுவலர்கள் தொழிற்சாலை சட்டம் 1948—ன் கீழ் பதிவு செய்யப்பட்ட அரிசி ஆலைகளை அவ்வப் போது ஆய்வு செய்து அது சமயம் காணப்படும் குறைபாடு களுக்கு நடவடிக்கை மேற்கொள்கிறார்கள்.

(ஆ) ஒன்பது அரிசி ஆலைகள் மீது தொழிற்சாலைகள் சட்ட விதி மீறுதலுக்காக நீதிமன்றத்தில் வழக்கு தொடரப் பட்டுள்ளது.

(இ) 1. பதிவு செய்யப்பட்ட அரிசி ஆலைகள்—33

2. பதிவு செய்யப்படாத அரிசி ஆலைகள்—4

திரு. கு. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவா களே, அரசுக்கு புகார் வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது சம்பந்தமாக பெரியார் மாவட்டத்தி லிருந்து அங்கே இருக்கின்ற சங்கங்கள் அரசுக்கு புகார் செய் திருக்கிறார்கள் என்பது எனக்குக் கிடைத்த விவரங்கள். இருந்த

போதிலும், இதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அங்கே இருக்கிற அரிசி ஆலைகளில் பலவற்றில் தொழிற்சாலை சட்டப்படி ஆய்வு செய்யப்பட வேண்டிய உத்தியோகஸ்தர்கள் கராராக போக வில்லை என்றும், அங்கே உள்ளே வேலை செய்யும் ஆட்களின் எண்ணிக்கை சரிவர வைக்கப்படவில்லை என்றும், ஒழுங்காக இல்லை என்று தொழிலாளர்கள் மத்தியில் ஒரு பெரும் பிரச்சினை யாக இருக்கிறது. இப்படிப்பட்ட விவரங்கள் மீது ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு குறிப்பான திட்டங்கள் இருக் கின்றனவா ? இப்போது சொன்ன மாதிரி சில கேஸ்கள் வந்திருக்கிறது.

அது மட்டுமல்ல, இன்னும் பல ஆலைகளில் மொத்த தொழி லாளர்கள் எத்தனை பேர்கள் என்று பதியாமலே இருக்கிறார்கள். ஒரு சிலரின் பேர்களைத்தான் தொழிற்சாலையில் பதிவு செய் திருக்கிறார்கள். அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குத் கிடைத்த தகவலைச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் ஒரு சிறந்த தொழிற் சங்கத் தலைவர். அவருக்குக் கிடைத்த தகவலுக்கு மதிப்பு தரும் வகையில் திடீர் சோதனைகளைச் செய்வதற்கான ஏற் பாடுகளை இந்த அரசு செய்யும்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்த அரிசி ஆலை களில் அதிகப்படியான வேலை செய்யும் தொழிலாளர்கள், தாழ்த்தப்பட்ட, அரிசன மக்கள், அவர்களை தொழிற்சாலை அதிகாரிகள் தொழிற்சாலைக்கு வரும் போது, அந்தத் தொழி லாளர்களைக் கொண்டு போய், அந்த தொழிற்சாலையின் பெரிய காம்பௌண்டிற்குள்ளே மறைத்து வைத்ததாகக் கூட எனக்குக் கிடைத்த தகவல் இருக்கிறது. எனவே அந்த அதிகாரிகளுக்கு தெரியாதபடி, ‘சர்பிரைஸ் செக்’ செய்ய வேண்டுமென்றும், அந்த நிர்வாகிகளைப் பார்ப்பதோடு மட்டும் அல்லாமல், தொழிற் சாலையின் டிபார்ட்மெண்டுக்குள்ளே, காம்பௌண்டிற்குள்ளே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் அந்த தொழிலாளர்களையும் பார்த்து, தொழிலாளர்களிடத்தில் கலந்து பேசி அவர்களையும் கேட்கும்படி அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : மாண்புமிகு உறுப்பினர் சொன்ன எல்லா தகவல்களையும் சீப் இன்ஸ்பெக்டர் ஆப் பேக்டரீஸ் அவர்களிடத்தில் சொல்லி, இங்கேயிருந்து அனுப்பப்படும் அதிகாரிகளிடத்தில் எல்லா தகவல்களையும், எவ்வளவு தந்திரமாக செய்ய முடியுமோ, அப்படிச் செய்யச் சொல்கிறேன். கமிஷனரிடம் சொல்லி ஏற்பாடு செய்கிறேன்.

1984 பிப்ரவரி 23]

எல்லா விதமான ஏற்பாடுகளையும் செய்து, அங்கே தவறுகள் நடக்குமேயானால், அதைக் கண்டுபிடிக்க அரசு முயற்சிகள் எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டுக்கல் நகரின் குடிநீர்க் தட்டுப்பாட்டைப் போக்குவதற்கான மாற்றுத் திட்டம்.

148—(*வினா 20915)—திரு. என். வரதராஜன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் நகரில் குடிநீர்த் தட்டுப்பாட்டைப்போக்க அரசிடம் மாற்றுத் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது முதல் செயல் படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) திண்டுக்கல் நகரத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டம் ஆய்வு முடிந்து ஆயுள் காப்பீட்டு கழகத்தின் நிதி உதவி பெறுவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) ஆயுள் காப்பீடு கழக நிதி உதவி பெற்று திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. என். வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் குடிநீர் நெருக்கடி இப்போது நீண்ட காலமாக இருக்கக் கூடிய பிரச்சினை. இப்போது ஆய்வு முடிந்திருக்கிறது. ஆகவே இப்போது முதல் கட்டமாக 'பைலட் ஸ்கீம்' என்ற முறையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, இதிலே பிரச்சினை எதனால் எழுந்தது என்றால், 1986ஆம் ஆண்டு எவ்வளவு ஜனத் தொகை இருக்க வேண்டுமென்று கணக்கிட்டுப் போட்டோமோ, அதை விட 20,000 பேர்களை அதிகமாக 1981-லேயே உற்பத்தி செய்து விட்டீர்கள். நீங்கள் திண்டுக்கல்லில்தான் இருக்கிறீர்கள். மக்கள் தொகை அதிக மானதால்தான் பிரச்சினை. இல்லையென்றால், இந்தப் பிரச்சினை கிடையாது.

ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து நிதி பெற்று வேலை செய்வதாக இருக்கிறது. அந்தத் திட்டம் ஆரம்பித்து தண்ணீர் கொடுக்க ஏற்பாடுகள் செய்யலாமா என்று அதிகாரிகளோடு இந்த அரசு ஆலோசனை செய்யும்.